# விடியல்

## The Dawn


இதழ்-69, ஜனவரி-2015

தனிச்சுற்றுக்கு மட்டும்



<u>கௌரவ ஆசிரியர்</u>

முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

<u>ஒருங்கிணைப்பு</u>

முனைவர்.பெ.கணேசமுருகன்
துறைத்தலைவர்

<u>ஆசிரியர் குழு</u>

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

<u>தட்டச்சு & இதழ் வடிவமைப்பு</u>

முனைவர்சி.ஆர்.சுரேஷ் முனைவர் த.சுந்தரராஜ்
திரு. செ.தங்கராஜ் திரு. மு. சதீஸ்குமார்



வெளியீடு:

**தமிழ்த்துறை**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


## <u>தலையங்கம்</u>

இப்பூவுலகில் சூரியன் தான் முதல் கடவுள். விவசாயத்திற்கு பெரிதும் உதவிபுரிவது சூரியன். சூரியனுக்கு நன்றி சொல்லும் விதமாக விவசாயிகள் பொங்கல் பண்டிகையை கொண்டாடுகின்றனர். சூரியன் என்றால் இயக்குபவன் என்பது பொருள். சூரியனால்தான் ஒளியும் வெப்பமும் தோன்றுகின்றன. உலக உயிர்கள் அனைத்தையும் வாழ வைப்பவன் சூரியன். ஆதி மக்கள் சூரியனைத்தான் கடவுளாக கையெடுத்து வணங்கியிருக்கின்றனர். விவசாயிகள் மட்டுமல்லாமல் உலகில் வாழும் அத்தனை உயிர்களுக்கும் அடிப்படை சூரியன்தான். சூரியனே இல்லையென்றால் இந்த உலகமே இல்லை. இதனால் தைப்பொங்கல் தினத்தன்று வாசலில் பொங்கல் வைத்து சூரியனுக்கு படைக்கின்றனர். நாகரிக வளர்ச்சியடைந்த மனிதன் சூரிய,சந்திரர்களை அடிப்படையாகக்கொண்டுதனது வாழ்வியலையும், அறிவியலையும் அமைத்துக் கொண்டான். அவ்வாறு ஞாயிறை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்ட இயற்கையின் இயக்கத்திலே ஆண்டின் தொடக்கமே தைமாதம் எனப் பகுத்தான். எனவே மாறிவரும் ஆண்டின் தொடக்க நாளான தைமுதல்த் தேதியே தமிழர் புத்தாண்டு தினம் என்றும் தைப்பொங்கல் தினம் என்றும் கொண்டாடத் தொடங்கினான்.

தமிழன் தனது வாழ்வியலில் நுண்ணறிவுடன் செயல்படுபவன். ஒவ்வொரு செயலுக்கும் முக்கிய காரணத்தைக் கண்டுசெயல்பட்டான். தைப்பொங்கல் திருநாளில் அதிகாலையில் எழுந்து வீட்டுமுற்றத்தில் பொங்கலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்து புதுப்பானையில் பொங்குவர்.மாவிலைத் தோரணம் கட்டி

பொங்கல் பானையில் இஞ்சி, மஞ்சளிலை, கரும்பு என்பனவற்றைக் கட்டிப்பொங்குவர். மஞ்சள் தமிழர் வாழ்வில் மிக உன்னதமான இடத்தைப் பெற்றுள்ள பொருள் ஆகும். மஞ்சளை மகாலக்ஷிமியாகவே கருதினார்கள். மங்கலகரமான நிகழ்வுகள் அனைத்திலும் இன்றியமையாத இப்பொருள்என்றும் எம்மக்கள் காலம் முழுவதும் மங்கலமாக வாழ வேண்டும் என்பதைக் குறிக்கிறது.மாவிலை இலைகுவில் அழுகாது காய்ந்து சருகாகும் ஒரு பொருள். அதுபோல் மனிதனும் தன்வாழ்வில் நன்றாக வாழ்ந்துமுதுமையை அடைய வேண்டும் என்பதே. கரும்பின் நுனிப்பகுதி உப்புச் சுவையுடையது. அடிப்பகுதி இனிப்புச் சுவையுடையது. இளமையில் நுனிக்கரும்பு உவர்ப்பது போல் கஷ்டப்பட்டு உழைத்தால் முதுமையில் அடிக்கரும்பு இனிப்பது போல் மகிழ்வாக வாழலாம்.இத்தத்துவங்களைத்தான் தைப்பொங்கல் தினத்தில் தமிழர் கடைப்பிடிக்கின்றனர்.

தமிழர் மட்டுமல்ல இன்று வேற்று நாட்டவர்களும் தமிழரைப்போலவே தைப்பொங்கலைக் கொண்டாடுகிறார்கள். ஜப்பான், தாய்லாந்து இந்தியா மொரீஷியஸ் போன்றநாட்டு மக்களும் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள். ஜப்பானியர்களும் தை 14ம் திகதி அன்றுபழைய பயன்பாட்டுப் பொருட்களைஎரிப்பார்கள்.தமிழர்களும் அவ்வாறே செய்கின்றார்கள். தை 15ஆம் நாள் ஜப்பானியர்களும் தமிழர்கள் போல் தோரணங்களைத் தொங்கவிட்டு புதுநீர் அள்ளி பருப்புச் சேர்த்து சமைத்தபொங்கலைப் பரிமாறுகிறார்கள். தமிழர்கள்பொங்கல் பானையில் பொங்கும்போது "பொங்கலோ பொங்கல்" என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றார்கள்.அதேபோல் ஜப்பானியர்கள் தமது புத்தாண்டான தை 15ம் நாளில் **FONKARA-FONKARA** என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றார்கள்.தை 16ம் நாள் பணியாளர்களுக்கு புத்தாடை வழ்ங்கல், முன்னோர்க்குப் படையல் செய்தல் போன்றகாரியங்களைச் செய்கின்றார்கள். பருப்புத் தவிடு பொங்க பொங்க, அரிசித்தவிடு பொங்க பொங்க என்ற கருத்துப் படப் பாடப்படும் யப்பானிய வாய் மொழிப்பாடலில் "பொங்க— பொங்க "என்ற சொற்களுக்கு யப்பானிய மொழியில் **HONGA-HONGA** என்றே பாடுகின்றார்கள். பொங்கலுக்கு மறுநாள் நாம் மாட்டுப்பொங்கல் கொண்டாடுவதுபோல, ஜப்பானில் குதிரைப் பொங்கல் கொண்டாடுவார்கள். அன்று குதிரைகளை நன்கு தேய்த்துவிட்டு அலங்காரம் செய்து, மலர் மாலைகள் சூட்டி, குதிரைகளுக்கு இனிப்புக் கொடுப்பது வழக்கம். மியான்மரில் (பர்மா) பொங்கல் திருநாள் அன்று புத்தாடை அணிந்து சூரிய வழிபாடு செய்வதுடன், கால்நடைகளுக்குப் பூஜை செய்து போற்று கின்றனர். அமெரிக்காக் கண்டத்தில் வாழும் செவ்விந்தியர்கள் அறுவடை செய்த சோளத்தைக் கடவுளுக்குப்படைக்கும் பண்டிகை ஒன்றைக்கொண்டாடுகின்றார்கள். யேர்மனியிலும் அறுவடைத்திருநாள் ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது.தம் காணிகளில் விளைந்த காய்கறிவகைகள், கிழ்ங்குவகைகள், கனிகள் யாவற்றையும் தேவாலயத்தில் பூசைக்கு வைத்து இயற்கைக்கு நன்றிசெலுத்தும் நாளாகக் கொண்டாடுகின்றார்கள் எகிப்தில் சூரியக்கோவில்கள் இருந்துள்ளன. அங்கே சூரியவழிபாடு நடைபெற்றுள்ளன என்பது தெளிவாகின்றது. பலநாடுகளில்சூரியவழிபாடு நடைபெற்றுள்ளன என்பது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒருநாட்டின் முதுகெலும்பெனத் திகழும் உழவனும், ஒருநாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய ஊன்றுகோலாக விளங்கும் உழவுத்தொழிலையும் போற்றி திருநாளான தைப்பொங்கல் பண்டிகையை நாம் அனைவரும் கொண்டாடி இன்புறுவோம்.

# உள்ளடக்கம்


**கவிதை**......................3-11

- புதுயுகம் வருக
- மனிதநேயம்
- அவசரம்
- அம்மா
- வெற்றி
- மரணம்
- ஓய்வில்லை
- காலத்தில் பூக்காத காளான்கள்
- நம்நட்பு
- பிரிவு
- காதோர முடிகள்
- வாழ்க்கை
- திருச்செங்கோட்டின் சிறப்பு
- வானவில்
- சோகம்
- அம்மாவின் பெயர்
- கனவு
- எனது அருமை மாணாக்கர்களே
- அருமை நண்பன்
- மழை
- இளைஞனே உயித்தெழு
- சூரியனும் நிலவும்
- இயற்கை
- நட்பின் பிரிவு
- அன்பு
- ஹைக்கூ கவிதைகள்
- அம்மா
- கவிதை
- மூடநம்பிக்கை
- அம்மா
- தோழி
- பகற்கனவு
- நட்பு
- நேரம் தவறாமை
- நட்பு

**சிறுகதை**.....................12

- Humanity

**கட்டுரை**....................13-19

- மண்ணையும் பெண்ணையும் சிதைக்கும் மது
- "காந்தி கணக்கு" என்றால் என்ன?

**பொது அறிவு**........19-27

- InternationalDay of the January
- திருக்குறளின் பெருமை
- சின்னசின்ன செய்திகள்
- நாடுகளும் தேசிய பூக்களும்
- ஆட்டுப்பாலின் நன்மைகள்
- புத்தரின் போதனைகள்
- விடுகதைகள்
- புதிர்கள்
- மருத்துவக்குறிப்பு
- பொன்மொழி
- விடுகதை
- சித்தமருத்துவம்
- அனுபவ அறிவு
- பழமொழிகள்

**ஓவியம்**..................27-32

# கவிதைகள்

## புதுயுகம் வருக!

புதுயுகமே வருக! புத்தம் புது
மலர்களைத் தருக!
பூத்த மலர்களுக்கெல்லாம்
புத்துணர்வைத் தர நீ வருக!
செல்வங்களை மாணவர்
குழந்தைகள் ஆக்க நீ வருக!
விடிவெள்ளிக்கு விடியல்
கொடுக்க நீ வருக!
மாணவர் செல்வங்களுக்கு
மதி உணர்வை நீ வருக!
முதியோர் இல்லத்தை
உடைத்தெரிய நீ வருக! – என்று
நீ வருவாய் என்று – உன் வரவை
எதிர்பார்த்து நிற்கும்
பழையயுகம்...

**கோ.நந்தினி**
உயிரித் தொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு

## மனித நேயம்

சாதி என்ற இரண்டெழுத்து மனிதன்
சமத்துவத்தின் முற்றுப்புள்ளி...
மதம் என்ற மூன்றெழுத்து மனிதன்
ஒற்றுமையின் மூன்றெழுத்து...
அறியாமை என்ற நான்கெழுத்து
கல்வியின் முற்றுப்புள்ளி..
இது போன்ற முற்றுப்புள்ளிகளில்
மூல்கி கிடக்கிறது
மனிதனின் மனமும்
மனித நேயமும்!!!

**பூபதி**
பி.சி.ஏ –ஆ' பிரிவு முதலாமாண்டு

## அவசரம்

ருசித்து உண்ணாவிட்டாலும்
பசிக்குக் கூட
உண்ணமுடியவில்லை..
ஏனெனில்
வாசலில்
பள்ளி வாகனம்!

**எஸ்.எம்.தமிழ்ச்செல்வன்**
II BSC (MB)

## அம்மா

பட்டினி கிடந்து
பள்ளியில் சேர்த்தேன்!
கல் மண் தூக்கி
கல்லூரியில் சேர்த்தேன்!
வெயில் வெந்து
வேளையில் சேர்த்தேன்!
மகனே! நீயோ!
எளிதில் என்னை
முதியோர் இல்லத்தில்
சேர்த்துவிட்டாயே?

**ம.சபரிஸ்**
வணிகவியல் முதலாமாண்டு

## வெற்றி

மாறாதது எதுவும் எளிதில்
மறைந்து போவதில்லை
வளராதது எதுவும் எளிதில்
அழிந்து போவதில்லை
இழப்புகள்தான் அன்பின்
அடையாளம் – எதையாவது
ஒன்றை இழந்தால்தான்
எதையாவது ஒன்றை பெறமுடியும்

**அ.சந்தோஷினி**
ஆங்கிலத்துறை முதலாமாண்டு

## மரணம்

மண்ணில் பிறக்கும் முன்பு
நான் யாரோ!
மண்ணில் பிறந்த பிறகு
ஆரிராரோ!
உறவுகளில் இணைந்த பிறகு
சுவையாரோ!
உன் நட்பில் கலந்த பிறகு
உயிராரோ!
மரணம் என்ற பசி என்னை
திண்ற பிறகு
ஒப்பாரிபாடலானாரோ!!

**அ.சந்தோஷினி**
ஆங்கிலத்துறை முதலாமாண்டு

## ஓய்வில்லை

அலுவலக வேலை
செய்து வந்த கணவருக்கு
ஐம்பத்தெட்டு வயது
ஆகிவிட்டதென்று
ஓய்வு கொடுத்துவிட்டார்கள்...
வீட்டில் உள்ள வேலைகளைச்
செய்து வருகின்ற
மனைவிக்கோ
அறுபது வயதுக்கு மேலாகியும்
ஓய்வு கிடைக்கவில்லை!

**ரா.மனிஷா**
பி.சி.எ முதலாமாண்டு

## காலத்தில் பூக்காத காளான்கள்

நேற்றிரவு பெய்த காலத்துமழையில்
ஈரக்குலை நடுங்கும்படி
குமுறியது வானம்.
வானத்தின் கண்சிமிட்டலாய்
பூமியில் விழுந்துகொண்டேயிருந்தது
மின்னல்.

சருகால் வேய்ந்த கூரைவீட்டில்
சுக்குக்கசாயம்
குடித்துக்கொண்டிருந்த
தாத்தா சொன்னார்,
“மின்னல் கடுமையா வெட்டுது
காடுகரை வாய்க்காவரப்பு
கண்மாயெல்லாம்
காளான்கள் பூத்துக்குலுங்கும்
காலையில்”.

விடியக்கருக்கலில் எழுந்து
ஓட்டமும் நடையுமாய்
ஊரைவிட்டு வருகையில்
தாத்தாவும் அய்யாவும்
முன்பு வீட்டுக்கு பறித்து வந்த
முட்டைக்காளான்களும்
குடைக்காளான்களும்
மீண்டும் பூத்திருந்தன
என் கண்களில்.

வாய்க்கால், வரப்பு, கண்மாய் என
பூமியின் மேனி முழுவதும்
தடவிப்பார்த்துவிட்டேன்
கண்களாலும் பாதங்களாலும்.
பச்சைப்பசேரென படர்ந்திருக்கும்
புற்களுக்கிடையில்
நிலவைப்போல் எட்டிப்பார்க்கும்
அதனழகு
மனதின் போலிப்புனைவாய்
நின்றுகொண்டிருக்கையில்,
போன வெள்ளாமையில்
விதைத்தும் தெளித்தும்
வெளியே வீசிய
உப்புச்சாக்குகளும்,
மருந்துக்குடுவைகளும்
மழையில் நனைந்து
காளானைப்போல்
வெள்ளையாய் மின்னுகின்றன
பூமியெங்கும்.

கால்நடைகளின் சாணத்தையும்
கரம்பை மண்ணையும்
அடியுரமாய் போட்ட
அந்தக்காலத்தை
தாத்தா நினைவுகூர்ந்திருக்கிறார்
நேற்று.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை.

## நம் நட்பு

சிறகுகள் கிடைத்தால் பறப்பதல்ல
நம் நட்பு..
சிலுவைகள் கிடைத்தாலும் சுமப்பதே
நம் நட்பு!

**எஸ்.மணிமேகலா**
ஆடை வடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## பிரிவு

பள்ளியின் கடைசி
நாளில் கையொப்பம்
வாங்கும் எந்த நண்பர்களுக்கும்
தெரிவதில்லை – அது
பிரிவின் ஒப்பந்தம் என்று!

**ர.கவிதா**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## காதோர முடிகள்...

உந்தன் காதோர முடிகளிடம்
என் காதலினை சொல்லி வச்சேன்

அது சொல்ல வரும் போதெல்லாம்
உன் கைவந்து தடுக்குதடி
அவள் அழகாய் வருடிவிடும்
காதோர முடிகள்...

**கு.பந்தலராஜன்,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்,ஆ-பிரிவு

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது
ரோஜா செடி மாதிரி – அதில்
முள்ளும் இருக்கும்
மலரும் இருக்கும்
முள்ளைக்கண்டு பயந்து விடாதே!
மலரைக்கண்டு மயங்கியும் விடாதே!

**செ.உஷா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## திருச்செங்கோட்டின் சிறப்பு

ஆண் ஆதிக்கத்தை அழிக்கவும்
பெண் அடிமைத்தனத்தை ஒழிக்கவும்
ஆணும் பெண்ணும் சமம் என்பதை
உணர்த்தும் வகையில்
“அர்த்த நாரீஸ்வரராய்”
இணைந்து நின்றனர்
சிவனும் சக்தியும்
திருச்செங்கோட்டு மலையில்..

**ரா.அனுஜா**
ஆங்கிலத்துறை மூன்றாமாண்டு

## வானவில்

ஏழு நிறங்களையும் பூட்டிக்
கொண்டு வரும் வானவில்லே!
அனைவரையும் ஒரு நிமிடம்
திரும்பி பார்க்க வைக்கும்
அதிசயப் பெண் நீயே!!

**எஸ்.எம்.தமிழ்ச்செல்வன்**
II BSC (MB)

## சோகம்

“உலகையே வெறுத்த
விழிகளின் ஓரத்தில்
ஏதோ ஒரு ஞாபகத்தின்
எச்சமாய் எட்டிப்பார்க்கிறது
கண்ணீர் துளிகள்..”

**ச.அங்காளபரமேஸ்வரி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## அம்மாவின் பெயர்

இரவில் கண்மூடி உறங்கும் முன்
என் அம்மாவின் பெயரைச் சொல்லிதான்
உறங்குவேன் - ஏனெனில்
மூடிய கண்
திறக்க முடியாமல் போய்விட்டால்
என் வாழ்வில் நான் கூறிய
கடைசி வார்த்தை
என் அம்மாவின் பெயராகத்தான்
இருக்கும்...!

**வி.கௌதம்**
கணினி அறிவியல் அ'பிரிவு முதலாமாண்டு

## கனவு

கனவுகள் நினைவுகளாக
மலரும் என விரும்பினேன் - ஆனால்
என் கனவுகள்
கண்ணீராக கரைவதேனோ?

**எஸ்.மலர்விழி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## எனது அருமை மாணாக்கர்களே!

நுட்பங்கள் பல பயின்று
பருவம் மூன்று கடந்த
மாணவ செல்வங்களே!
கற்ற கல்வியை நிலை நிறுத்தி
பட்டங்கள் பல பெற்று
நிறுவனங்களில் பணிபுரிந்து
பதவிகள் உயர்வு பெற்று – உங்கள்
புகழ்பார் முழுக்க பரவி
K.S.R என்ற கல்லூரியில்
வந்தவர்கள் நாங்கள் என்று
தலை நிமிர்ந்து சொல்ல
எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்....

**எஸ்.ஹேமலதா**
கணினி அறிவியல் அ்பிரிவு முதலாமாண்டு

## அருமை நண்பன்

பாட்டுக்கு ஒரு பாரதி
குறளுக்கு ஒரு திருவள்ளுவர்
கவிதைக்கு ஒரு கண்ணதாசன்
கற்புக்கு ஒரு கண்ணகி
காட்டுக்கு ஒரு சிங்கம் - நம்
நாட்டுக்கு ஒரு மகாத்மா
நீதிக்கு ஒரு மனுநீதி
அறிவியலுக்கு ஒரு அப்துல்கலாம்
பெற்றெடுக்கத் தாய்
பேணிக்காக்கத் தந்தை
கற்றுக்கொடுக்க என் ஆசான் - அதைக்
கற்றுக்கொள்ள நான்
காப்பதற்கு கடவுள்
தோள்கொடுக்கத் தோழன்
நட்புக்கு ஒரு பிசிராந்தையார்
உனக்கு நான் - எனக்கு நீ
ஆபத்தில் உதவும் அருமை நண்பன்...!

**கு.திவ்யா**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## மழை

மழையே! கருமேகமாய் மாறி
மழையாய் பொழிகின்றாய்
இடியும் மின்னலும் கலந்து
மழையாய் பொழிகின்றாய்
எங்கும் இஞ்சிமஞ்சள்
கொஞ்சிவிளையாடுகின்றாய்
மீண்டும் வா! உன் இன்பத்திற்காக
காத்திருப்போம்...

**இரா.நதியா**
உயிரிதொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு

## இளைஞனே உயிர்த்தெழு

உன்னை கடலில் போட்டால்
கட்டுமரமாய் மிதந்திடு
புயலில் அகப்பட்டால்

புள்ளினமாய் பறந்திடு
மண்ணில் புதைத்தாலும்
முளைத்துக் கிளம்பிடு
வெள்ளத்தில் அகப்பட்டால்
எதிர் நீச்சல் அடித்திடு
நெருப்பில் போட்டாலும்
தங்கமாய் மிளிர்ந்திரு
சாம்பல் போனாலும்
மீண்டும் உயிர்த்தெழு
முடிவெடுப்பது நீயாக இருப்பின்
முயற்சிக்கு தடை யாரும் இல்லை
இளைஞனே!
மூண்டும் உயிர்த்தெழு.

**பு.கமலக்கண்ணன்**
இளங்கலைத் தமிழ் - முதலாமாண்டு

## சூரியனும் நிலவும்

சூரியனிடம் நிலவு
ஏக்கமாக சொன்னது
என்னைப் பார்த்தவுடன்
தூங்கிவிடுகிறாய் என்று
சூரியன் சொன்னது
என்னைப் பார்க்கக் கூட
தூக்கத்திலிருந்து எழ யாரும்
தயாராக இல்லை
நீ என்னிடம் சொல்கிறாய்
நான் யாரிடம் சொல்ல!

**வே.சுபா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## இயற்கை

இயற்கையில் சிறு மாற்றம்
இயல்பில் ஒரு தடுமாற்றம்
பற்று இன்று வரவானது
பகல் இப்போ இரவானது
இரவெல்லாம் ஜொலிக்கிறது
என் இதயம் ஏனோ கனக்கிறது
காற்று மட்டும் உணவானது
காதல் இங்கு கனவானது
விசைப்பலகையில் விரல்கள்
வர்ணனையில் ....
விந்தையால் சிந்தை மட்டும்
சிந்தனையில்
நமை ஆட்டுவிப்பது ஒரு 'கை'
அறிவியலுக்கு அது இயற்'கை'
அதனையும் ஆட்டுவிப்பது ஒரு
இறை'கை'
படித்து படித்து அலுத்துவிட்டது
இறைவா உன் சரணத்தை
உடனடியாகக் கொடுத்து விடு
எனக்கு "instart' மரணத்தை
நின்று கொள்வதுதான் 'உன் Fastion O'
அதனால்தான் எனக்கு நினைவுகள்
எனும் "Slow Poison O"
என் பாவங்கள்
என்னை பார்க்கிறது "பாவமாய்"
என் வஞ்சிக்கப்பட்ட வாழ்யெண்ணி
அழுது கொண்டே நான் ஓர் ஓரமாய்
எல்லாமே உன் விளையாட்டு ..
இருந்தும்
இது நான் வடித்த ஓர் வசனப் பாட்டு....

**எஸ்.பாலாஜி,**
இரண்டாமாண்டு கணினி அறிவியல் ஈ பிரிவு

## நட்பின் பிரிவு

காரணம் இல்லாமல்
கலைந்துபோக
இது கனவும் இல்லை
காரணம் சொல்லி
பிரிந்துபோகும்
இது காதலும் இல்லை...
உயிர்உள்ளவரை
தொடரும்
உண்மையான அன்பு.

**வி.அஜித்குமார்**
இரண்டாமாண்டு தமிழிலக்கியம்

## அன்பு

'அ' உயிரெழுத்தின்
முதல் எழுத்தே – நீ
எண்ணிக்கையில் - 1
'ன்' மெய் எழுத்தின்
இறுதி எழுத்தே – நீ
எண்ணிக்கையில் - 18
'பு' என்ற உயிர்மை எழுத்தே
உன் எண் வரிசை 81 – கண்டீரா
அன்பு என்ற தமிழ் சொல்லின்
கூட்டுத் தொகை 100 என்று
அன்பென்றால் நூறு
நூறென்றால் முழுமை
முழுமை என்றால் நிறைவு
அன்பு வழிச் சென்றால்
முழுநிறைவுற்ற மகிழ்ச்சியும்
அரண் வழிவரும் அமைதியும்
நூற்றுக்கு நூறு – நம்
வாழ்வின் சாத்தியமே - இதுவே
சான்றோரின் சரித்திரமே...

**பி.வித்யாதேவி,**
இரண்டாமாண்டு கணினி அறிவியல்அ-பிரிவு

## ஹைக்கூ கவிதைகள்

**பிரிவு**

மீண்டு வரமுடியாத
ஒற்றை வழி
பாதை!

**சகோதரி**

அம்மாவின் சாயலில்
உடன் பிறந்த
தோழி!

சத்தம் ஆயுதம் இல்லாத
சாதுரியமான போர்!
சதுரங்கப்போர்

அழகு
கடவுளின் பிம்பம்
பூமியில்!

**அன்பு**

மனிதனை
பிரதிபலிக்கும்
கண்ணாடி!
தோழன்
ரத்த பந்தம் இல்லாத
சொந்தக்காரன்...

முக்கனியின் சுவை
மூன்றெழுத்துக்களில்..
தமிழ்

தந்தை
குடும்பம் ஒளிர
உருகும் மெழுகு!

**ஆசிரியர்**

அன்னையின் அன்பிற்கும்
தந்தையின் மரியாதைக்கும்
உரியவர்!

**பி.வித்யாதேவி**
கணினி அறிவியல் அ' பிரிவு முதலாமாண்டு

## அம்மா

நான் பார்த்த முதல்
உலகம் அம்மா
நான் நேசித்த முதல்
பெண அம்மா
நான் உச்சரித்த மூன்றெழுத்து
மந்திரம் அம்மா
அன்பு என்ற சொல்லின்
ஆணி வேர் அம்மா
உயிருள்ள ஓவியம் எனக்கு
உயிர்கொடுத்து உருவாக்கிய காவியம்
என் அம்மா
பத்துமாதம் கருவில் சுமந்து
வலியால் என்னை ஈன்றெடுத்து
தன் இரத்தத்தையும் பாலாக்கிய
தெய்வம் அம்மா
விலையில்லா ஓவியமே என்னை
ஈன்றெடுத்த காவியமே
உன்னை போற்ற எனக்கு
வார்த்தை இல்லை .....

**எஸ்.பூவரசன்,**
உயிரி தொழில்நுட்பவியல்

## கவிதை

அழகான வார்த்தைகளின்
உருவாக்கமே
கவிதை என்கிறார்கள்
பிறகு ஏன் உன் பெயர்
கவிதைத் தொகுப்பில்
இடம்பெறவில்லை?

**எஸ்.மலர்விழி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## மூடநம்பிக்கை

கப்பல் கூட கண நேரத்தில்தான்
கடலில் மூழ்குகின்றது
ஆனால்,
பகுத்தறிவால் படைக்கப்பட்ட நாம்
முழுவீச்சில் மூழ்கிக்கொண்டிருக்கிறோம்
மூடநம்பிக்கையில்..
மூடநம்பிக்கைக்கு
முட்டுக்கட்டை போட்ட
பகுத்தறிவுப் பகலவனின்
கொள்கைகள் எங்கே?
காற்றில் பறந்து விட்டதா? அல்லது
காணாமல் போய் விட்டதா?
விழித்தெழு நண்பா! மூழ்காதே
மூடநம்பிக்கையில்
முக்தியடைவாய்
உன் சுய சிந்தனையில்
சிந்தித்துச் செயல்படு!
செய்பட்டுச் சிந்திக்காதே.

**ப.பிரியதர்ஷினி,**
முதலாமாண்டு தமிழ் இலக்கியம்.

## அம்மா

அம்மாவுக்கு என்று தனியாக
கவிதை வேண்டாம்
அன்பாகப் பழகிப்பார்
அம்மாவே
கவிதைதான்...!

**நா.சுவேதா**
வணிகவியல்துறை முதலாமாண்டு

## தோழி

இன்பத்தில் உன்னை விரும்பினேன்
துன்பத்தில் உன்னை நாடினேன்
தனிமையில் உன்னை தேடினேன்
தோழியே உன்னைத் தானே!

**செ.சௌந்தரி,**
இரண்டாமாண்டு கணினி அறிவியல், ஈ பிரிவு

## பகற்கனவு

தெரிந்தும் தெரியாமல்
புரிந்தும் புரியாமல்
விளித்துக் கொண்டே
காணும் கனவு
வாழ்வும் ஒரு சுகமே!"

**ச.அங்காளபரமேஸ்வரி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட்பு

விக்கல் எடுக்கின்றது
தண்ணீர் குடிக்க மாட்டேன்!
ஏனெனில் நினைப்பது
என் நண்பன்
நிலைக்கட்டுமெ சில நிமிடம்
நட்பின் நினைப்பு...

**சி.சிபிசெல்வன்**
முதலாமாண்டு இயற்பியல்

## நேரம் தவறாமை

இளைஞனே!
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
உன் கடிகாரத்தை மாற்றிக் கொள்.
துயில் கொண்டு துக்கம் காணாதே
சோம்பல் கொண்டு
சோதனையில் வாடாதே
ஏனென்றால் வெற்றிக்காக நிறையபேர்
காத்திருக்கிறார்கள் வரிசையில்!
உனக்கு
இடம் கிடைப்பது உறுதி கடைசியில்!
விரைந்து செயல்படு!
விழா பல காணும் சுவடு.

**பா.பிரியதர்ஷிணி.**
முதலாமாண்டு தமிழிலக்கியம்

## நட்பு

உனது நிறம்
கருப்பாக இருந்தாலும்
உன்னுடன் பழகிய நாட்களில்
உன்னை புரிந்து கொண்டேன்
உன் மனது
வெள்ளை என்று!

ரா.சசிக்குமார்
II B.sc (BC)

# சிறுகதை

## HUMANITY…

**"HUMANITY should be present in everyone…… That EACH AND EVERY MAN should DESERVE……"**

Once upon a time, there was a king, who was ruling the country in a good intentioned manner for the welfare of his people. But he doesn't like their behaviour that they are jealous about each other and selfish. They don't have compassion too. So, the king thought to impart knowledge on benefit to be learnt by his people. He contrives & summons all of his people to gather at a place and announces that he has concealed a treasure at a particular part in his country. He said them to discern it & also added that the one who discerns it will win it as a prize. At once the king's oration has completed, everyone started to go in seeking for that treasure. When one of the ministers of that country passes by, there was a rock at the centre of the road. But he didn't care about it as the minister was very keen on looking for that treasure. Many passed the road. It was a great disturbance for them but nobody heeded to step the rock aside by putting a strain on firmly that it is so durable to shake. There that trespasser found that treasure beneath the rock. On perceiving it, the trespasser seized that treasure and proceeded to the king to grant it. The king rewarded that treasure to that trespasser in front of his country people gathered and told that, "I have organised a trial to discover my people's humanity, but no one of them excelled in it". So, this is a gift for a merit belong you on appreciating your humanity. Now they might have known the value of Humanity & what Humanity is? Thus, the HUMANITY wins at most…

**Gowsalya M,** II BA English.



**கட்டுரை**

## மண்ணையும் பெண்ணையும் சிதைக்கும் மது

உலக சுகாதார மையம் (WHO) புகையிலையாலும், மதுவாலும் ஏற்பட்ட மரணங்களை 2010 ல் பட்டியலிட்டதில், உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் மதுவால் நிகழும் மரணங்களை விட புகையிலையால் ஏற்படும் மரணங்கள் அதிகம் என்கிறது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் புகையிலைப் பயன்பாட்டால் 60 லட்சம் பேரும், மதுவால் 25 லட்சம் பேரும் மரணமடைகின்றனர். 2020ம் ஆண்டில் புகையிலை மரணம் 75 லட்சமாகவும், மது மரணங்கள் 38 லட்சமாகவும் உயரும் என அபாயக்குரல் எழுப்புகின்றது உலக சுகாதார மையம். ஆனால் அதற்கெல்லாம் இந்தியாவின் மத்திய அரசும், மாநில அரசுகளும் செவிசாய்க்கவில்லை. நாட்டு மக்களின் நலனில் அக்கறையில்லாமல் வருவாய் ஈட்டுவதிலேயே குறியாய் இருக்கின்றன என்பதற்கு மிகச்சிறந்த உதாரணம் தமிழக அரசின் மதுவிற்பனைக் கொள்கை.

தமிழக அரசு தன் மக்களுக்குச் செயல்படுத்திவரும்நலத்திட்டங்ளுக்குத் தேவையான நிதியை மதுக்கடைகள் மூலம் பெறுகிறது என்பதை, தமிழ் நாட்டின் 2002-2014 வரையான மது விற்பனையின் வருவாயைப் பார்த்தால் புரியும். வேறெந்த இந்திய மாநில கஜானாவையும் மதுவிற்பனை இந்த அளவிற்கு நிரப்பியதில்லை.

**மது விற்பனை மூலம் தமிழக அரசுக்குக் கிடைக்கும் வருவாய் 2002-2014**

| ஆண்டு | வருவாய் (கோடியில்) | வருவாய் உயர்வு |
|---|---|---|
| 2002 - 03 | 2,828.09 | |
| 2003 - 04 | 3,639.00 | 28.67% |
| 2004 - 05 | 4,872.00 | 33.88% |
| 2005 - 06 | 6,086.95 | 24.94% |
| 2006 - 07 | 7,300.00 | 19.93% |
| 2007 - 08 | 8,822.00 | 20.85% |
| 2008 - 09 | 10,601.05 | 20.17% |
| 2009 - 10 | 12,491.00 | 17.82% |
| 2010 - 11 | 14,965.00 | 19.80% |
| 2011 - 12 | 18,081.16 | 20.82% |
| 2012 - 13 | 21,680.67 | 19.91% |
| 2013 - 14 | 21,641.14 | - 00.99% |

இந்த வருவாயையும்,விஷச்சாராயச் சாவுகளின் எண்ணிக்கைக் குறைவையும் தமிழ் நாட்டில் மதுக்கடைகளைத் தொடர்ந்து

நடத்துவதற்கான காரணங்களாக அரசு கூறுகிறது.ஆனால் ஒவ்வொரு ஊரிலும் சமீப காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் மரணங்களில் 50% மதுவினால் ஏற்படுகின்றன என்ற உண்மைக்கு புள்ளி விபரங்கள் தேவையில்லை. ஒவ்வொருவரும் நேரடியாகவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். கள்ளச்சாராயம் குடிகாரர்களின் உயிரை அன்றே எடுத்தது, டாஸ்மாக்கோ கொஞ்சம் தாமதமாக எடுக்கிறது. "அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்பது போல மதுவுக்கு அடிமையானவர்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை என்பது மட்டும் நிதர்சனம்.

மது உயிரிழப்புகளை மட்டுமா ஏற்படுத்துகிறது?. இன்று சமூகத்தில் நடக்கும் 60% பிரச்சினைகள் (பாலியல் வன்கொடுமை, குடும்ப உறவுவின் சிதைவு முதலிய சமூகச்சீரழிவுகள், வன்முறை, சாலை விபத்து போன்றன) மதுவினால் நிகழ்கின்றன. முன்பு சமூகத்தில் அரிதாக நடந்த சமூகச்சீரழிவுகளை, இன்று துரிதமாகப் பெருக்கிய பெருமை மதுவிற்கு உண்டு. அவற்றுள் முக்கியமானது பெண்கள் மீதான வன்கொடுமை. சமீபத்தில், 19.07.2014 அன்று இரவு நெல்லையிலிருந்து சென்னைக்குப் போயிக்கொண்டிருந்த நெல்லை எக்ஸ்பிரஸில், விழுப்புரத்திற்கும் சென்னைக்கும் இடையில், ஐந்து வயதுச் சிறுமி ஒரு அச்சக ஊழியரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானது அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது. நாற்பது வயதுடைய அந்த நபர் ஐந்து வயதுக் குழந்தையின் மீது பாலியல் இச்சை கொள்ளுமளவிற்கு அவர் மனநிலையை சிதைத்திருக்கிறது மது. 2012 நவம்பரில் தில்லியில் மருத்துவ மாணவி மீதும், 2013ல் மும்பையில் பெண்பத்திரைக்கையாளர் மீதும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்கொடுமைகளிலும் மதுதான் முக்கிய வினையாற்றியிருக்கிறது. அதே போன்று சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக வாழும் சரிநிகர் வாழ்க்கையையும் மது அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. பெண்கள் ஆண்களைப் போன்று இரவு நேரத்தில் இயல்பாக பயணிக்க முடியவில்லை. அரசின் பொது போக்குவரத்து சேவையில் தான் பெண்களுக்கான பாதுகாப்பின்மையும் அதிகம் என்பதற்கு கவிஞர் அ.வெண்ணிலாவின் நேரடி சாட்சியம் (தினமணி 21-07-2014) ஓர் உதாரணம்.

2

தமிழ்நாடு அரசின் தடையில்லா மது விற்பனையால் தமிழ்ச்சமுகம் அடைந்திருக்கும் கொடுந்துயரங்களில் புதிதாய் இணைவது விளைநிலங்களில் முளைக்கும் கண்ணாடித் துண்டுகள். இது கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்தில் நிலவும் தண்ணீர் பஞ்சத்தில் செழித்து வளர்ந்திருக்கிறது. பேருந்திலும், இருசக்கர வாகனங்களிலும் பயணிக்கும் போது, சாலையின் ஓரத்தில் கொஞ்சம் கவனமாய்ப் பாருங்கள். வறண்ட நிலங்களில் வெள்ளைப்பூக்களாய் மலர்ந்திருக்கும் நமது குடிமக்கள் விட்டுச்சென்ற, மதகு திறந்த தண்ணீர் பாக்கெட்டுகளும், பிளாஸ்டிக் கேன்களும், பாலித்தின் பைகளும். உச்சிவெயிலில் அந்த வெள்ளைப் பூக்களுக்கிடையிலிருந்து சில நட்சத்திரங்களும் உங்களைப் பார்த்துக் கண்சிமிட்டும். அது பகல் நட்சத்திரமோ, பூமியில் தோன்றும் ஒளிக்கீற்றோ அல்ல. நமது குடிமக்கள் உறிஞ்சிவிட்டு போட்ட போது உடைந்த மது பாட்டில்களின் சிறு துண்டுகள்.

அமெரிக்கா,ஐரோப்பா முதலிய மேலை நாடுகளில் வெள்ளி,சனி ஆகிய வாரஇறுதி நாள்களின் இரவை திருவிழா போல் கொண்டாடுவார்கள். அத்திருவிழாக்களில் மது என்பது சாதாரணம். ஆல்கஹால் இல்லாத/ குறைந்த மது வகைகள் அங்கு அதிகம். அவர்களுக்கு, தான் அருந்தப் போகிற மதுவில் உள்ள விஷத்தின் (ஆல்கஹால்) அளவு, மதுப்பாட்டில் களைக் கையாளும் முறை, அவற்றை சுற்றுச்சூழலுக்குக் கேடின்றி அப்புறப்படுத்தும்முறை முதலியவற்றில் விழிப்புணர்வும், தேர்ந்த அறிவும் உண்டு. அவர்கள் குடிப்பதற்குத் தேர்ந்தெடுக்கும் இடம், சூழல்,முறை முதலிய அனைத்தும் தற்கால இந்திய சமூகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

தமிழகத்தில் சாதி,மதம்,நிறம்,படித்தவர், படிக்காதவர், பணக்காரர், நடுத்தரம், ஏழை என்ற எல்லா ஏற்றத்தாழ்வு களையும் கடந்து சமத்துவம் நிலவும் ஒரே செயல்பாடு குடி. மூளை உழைப்பானாலும்,உடலுழைப்பானாலும் ஓய்வு என்பது அவசியம்.அந்த ஓய்வை நாம் எதிலிருந்து பெறுகிறோம். மௌனத்திலிருந்து, தூக்கத்திலிருந்து, பாடல் கேட்பதிலிருந்து என்று பல வழிகள் இருக்கின்றன. ஆனால், இன்றைய இளைய தலைமுறை ஓய்வையும், மன அமைதியையும் மதுவிலிருந்துபெறும் சாபக்கேட்டிற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மன அமைதியும்

ஒய்வும் மதுவிலிருந்து கிடைக்கிறது என்பதற்கு எந்த அறிவியல் ஆதாரமும் இல்லை. ஆனால் சமூகத்தில் அது ஒரு மூடநம்பிக்கையாகிவிட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை மது தமிழ்க்கலாச்சாரத்தோடு மிக ஆழமாக வேரூன்றிவிட்டது. பிறப்பு, இறப்பு, கோயில் திருவிழா, புத்தாண்டுக் கொண்டாட்டம் என மதுயில்லாத விழா இல்லை. ஒருவர் தனக்கு செய்த சிறு உதவிக்குக் கைமாறாக அவருக்கு மது விருந்து வைக்கும் கொடுமையும், தேசம் தனக்கு அளித்திருக்கும் குடியுரிமையின் அடையாளமான வாக்கை (vote) ஒரு பாட்டில் மதுவிற்காக விற்கும் அவலமும் உலகில் வேறெங்கும் நிகழாதவை. இந்தியக்கிராமங்கள் நகர்மயமாக்கலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தாலும் இந்திய சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் இந்தியாவின்ஆன்மா குக்கிராமங்களில் தான் இருக்கிறது. பெரு நகரங்களின் ஜோடிக்கப்பட்ட மதுபார்களை கண்டும் கேட்டும் பழகிய கிராமத்துக் குடிமக்கள் தன் வாழிடத்தின் அருகில் உள்ள விளைநிலங்களை திறந்தவெளி மதுபார்களாக மாற்றிக்கொண்டிருக் கிறார்கள். திறந்தவெளி கழிப்பிடம், திறந்தவெளி குளிப்பிடம் என பழகிப்போன கிராமத்துக் குடிமக்கள் திறந்தவெளி மதுபார்களை உருவாக்கி யிருப்பதில் வியப்பேதுமில்லை. திறந்தவெளிமதுபார்கள் தமிழர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. நம் பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்த கல்லுக்கடைகள் அனைத்தும் காங்கிரீட் கட்டிடங்களில் இயங்கவில்லை, கட்டாந்தரையில், பனைமர நிழலில், விளை நிலங்களின் விலா எலும்பில் கடை விரித்திருந்தன. ஆனால் அவற்றால் விளையாத சுற்றுச்சூழல் சீரழிவு இன்றைய நவீன திறந்தவெளி மதுபார்களால் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. விளைநிலங்களில் இருக்கும் திறந்தவெளி மதுபார்கள் நிரந்தரமானவையோ, நிர்வாகக் கட்டமைப்புடையவையோ அல்ல. குடிமக்கள் தனியாகவோ, குழுவாகவோ சாலையிலிருந்து ஓரத்தில் இருக்கும் விளைநிலத்திற்குள் ஒதுங்கும் போது திடீரென முளைப்பவை. திறந்தவெளி மதுபார்களின் ஆயுள் சில நிமிடங்களாகவோ, சில மணித் துளிகளாகவோ தான் இருக்கும். ஆனால் அதன் எச்சம் மண் வளத்தையும் சுற்றுச்சூழலையும் பல ஆண்டுகளுக்கு சீரழிக்கும்

வலிமையுடையது.இன்று மது அருந்தப் பயன்படுத்தப்படும் பொருட்கள் கல் குடிப்பதற்குப் பயன்பட்டவையல்ல. மது நிரப்பப்பட்டிருப்பது கண்ணாடி பாட்டிலில்,பாட்டிலின் மூடி தகரம், மது அருந்தப் பயன்படும் ஆகாரங்களான தண்ணீர்,காரம், இனிப்பு, மாமிசம் முதலியன பிளாஸ்டிக் பாட்டிலிலும், பாலித்தின் பைகளிலும் அடைக்கப் பட்டிருக்கின்றன. கண்ணாடிப்பாட்டில், பிளாஸ்டிக் பாட்டில், தகர மூடி, பாலித்தின் பை முதலியவற்றின் தன்மை, அவற்றைப் பயன்படுத்தும் முறை, அப்புறப்படுத்தும் முறை போன்றவற்றில் போதிய விழிப்புணர்வு அற்றவர்களாக இருக்கிறார்கள் இந்திய குடிமக்கள். இவற்றையெல்லாம் குடிமக்களுக்குக் கற்றுத்தரவேண்டிய பொறுப்பு யாருடையது?

வளர்ந்த நாடுகள் இந்தக்கழிவுகளை கவனமாகக் கையாள்கின்றன. ஒரு லிட்டர் குளிர்பானத்தின் விலை 90 ரூபாய் என்றால், அதைப் பயன்படுத்திய பின் வெற்றுப்பாட்டிலை மூல மதிப்பிலிருந்து 10 முதல் 20 சதவீதத்திற்குக் குறையாமல் திரும்பப் பெறுகிறார்கள். வெற்றுப்பாட்டில்களை (கண்ணாடி,பிளாஸ்டிக்) துல்லியமான கணக்கீட்டோடு (எடை,விலை) பெரு அங்காடியில் (super market) உள்ள தானியங்கி இயந்திரங்களே வாங்கிக் கொள்கின்றன. மேலும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து இரண்டு,மூன்று குப்பைத் தொட்டிகள் ஒரே இடத்தில் இருப்பதை மேலை நாடுகளில் காணமுடியும். நம்மூரின் நிலை வேறு. இன்று இந்தியாவின் பல மாநகரங்களில் பெரு அங்காடிகள் வந்துவிட்டன. ஆனால் இந்த வசதியைப் பற்றி அவைகளுக்கு அக்கரையில்லை. பழைய இரும்பு-பிளாஸ்டிக் கடைகள் தான் இந்த வேலையை செய்கின்றன. அங்கும் வெற்றுப்பாடில்களை திரும்பப் பெறும் நிலை குறைவு. அப்படியே திரும்பப் பெற்றாலும் பாட்டிலின் மூல மதிப்பிலிருந்து 1 முதல் 2 சதவீதமே கிடைக்கும். இந்த மதிப்பும், குடிமக்களின் பொறுப்பற்ற தன்மையும் வெற்றுப்பாட்டில்களை விளைநிலங்களில் விதைக்கச் செய்கின்றன. கண்ணாடி பாட்டில்கள், பிளாஸ்டிக் பாட்டில்களின் நிலை இதுவென்றால், பிளாஸ்டிக் டம்ளர்கள், பாலித்தின் பைகள் முதலியவற்றைக் கையாளும் முறை, மண்வளத்தைப் பற்றிய அறிவோ அக்கறையோ சிறிதும் அற்றவர்கள் நாம் என்பதை உணர்த்துகின்றன.

மூன்றாண்டு (2011-13) பஞ்சத்தால், விவசாயத்தை மறந்தது போல், விளைநிலங்களில் விதைக்கப் பட்டிருக்கும் கண்ணாடித்துண்டுகளின் விளைவைப் பற்றியும் நாம் சிந்திக்க மறந்துவிட்டோம். இந்த ஆண்டு பரவலாக பெய்துள்ள பருவ மழையினால் மகிழ்ச்சியாக கழனியில் இறங்கப்போகும் காலணி அணியா பாதங்களை நினைக்கும் போதுதான் நெஞ்சம் வலிக்கிறது. பருவமழை பொய்த்ததுவிவசாயத்திற்கு மட்டுமல்ல விளைநிலங்களுக்கும் கேடு தான். இந்தப் பஞ்சத்தில் விளைநிலங்களில் பாதி வீட்டுமனைகளாக மாறிவிட்டன, மீதி தண்ணியில்(மது) அழிந்து கொண்டிருக்கின்றன. தண்ணியில் அழியும் விளைநிலங்கள் பஞ்சத்தில் தான் அதிகம்.

குடி சமூகத்தையும் தனி மனிதனையும் சீரழிப்பதை உணர்ந்து அதைக் கண்டித்த திருவள்ளுவர் போன்ற அறிவுஜீவிகளும், சமூக வழிகாட்டிகளும் வாழ்ந்த தமிழகம் மதுவிற்பனையால் கஜானாவை நிரப்பிக்கொண்டிருக்கிறது. பக்கத்து மாநிலமான கேரளத்தை ஆளும் காங்கிரஸ் அரசு துணிச்சலான திட்டங்கள் மூலம் மதுக்கடைகளை மூட நடவடிக்கை எடுத்துவருகிறது. தமிழக அரசுக்கு அந்த விழிப்புணர்ப்பு வருவது எப்போது?. சமூக சீர்திருத்தவாதிகள் அனைவரும் எதிர்க்கும் மதுவை வருவாய்க்காக நடத்தும் அரசு உலகில் வேறெங்குமில்லை. மண்ணையும் பெண்ணையும் காக்கும் பொறுப்பு தமிழக அரசுக்கு இல்லையா?

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.

## ‘காந்திகணக்கு’ என்பதற்கு உண்மையான அர்த்தம் உங்களுக்கு தெரியுமா?

காந்திகணக்கு என்றாலே கிட்டத்தட்ட ‘நாமம்’ என்கிற அர்த்தத்தைத்தான் நாம் உருவாக்கி வைத்திருக்கிறோம். ஆனால், காந்திக்கணக்கு என்றால் என்ன என்பதற்கான உண்மையான அர்த்தம் என்னவென்று பலருக்கும் தெரியாது அதை இப்போது தெரிந்துக் கொள்வோம்.

மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகம் மேற்கொண்டிருந்தபோது அவருக்கு வியாபாரிகள் அத்தனை பேரும் தார்மீக ஆதரவு அளித்தார்கள் அவர்கள் காந்தியிடம் “நேரடியாக எங்களால் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. ஆனால்

எப்படியாவது உங்கள் போராட்டத்திற்கு நாங்கள் ஆதரவு அளிப்போம் இதில் கலந்து கொள்ள வரும் தொண்டர்களை எங்கள் கடைகளில் எது வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளச் சொல்லுங்கள்.

பணம் தர வேண்டாம். அடையாளம் தெரியாமல் பணம் கேட்க நேரும்போது 'காந்திகணக்கு' என்று எங்களுக்கு புரியும்படி சொன்னால் போதும். நாங்கள் அவர்களிடம் பணம் வாங்க மாட்டோம்'' என்றார்களாம் அந்த வியாபாரிகள். அப்படி வந்துதான் காந்திக்கணக்கு ஆனால் நாம் இதற்கு அர்த்தம் வைத்திருப்பதோ புரியாத கணக்கு ஒவ்வொரு சொல்லிலும் அதன் உள் அர்த்தத்தை புரிந்து செயல்பட்டால் அறிவு விசாலமாகும்.

**மு.சதீஸ்குமார்**

தமிழ் - உதவிப்பேராசிரியர்

## பொது அறிவு

**Important Day of the January**

**01 January**
New Year

**15 January**
Pongal

**26 January**
Republic Day

- **ஐசக் நியூட்டன் பிறந்த தினம்**(Isaac Newton's Birth Day): ஐசக் நியூட்டன் 1643ஆம் ஆண்டு ஜனவரி 4-இல் இங்கிலாந்து நாட்டில் உல்சுதோர்ப் என்னுமிடத்தில் பிறந்தார். இவர் கணிதவியலாளரும்,அறிவியலாளரும், தத்துவஞானியும் ஆவார். ஈர்ப்புவிசை பற்றிய ஆய்வுகள் மூலம் உலகின் மிகச் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராகக் கொண்டாடப்படுகிறார். இவரின் இயக்க விதியை நியூட்டன் விதி என்று அழைக்கின்றனர். இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் அறிவியலில் மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்தினார்.
- **ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் நிறுவன தினம்** (African National Congress Foundation Day): தென்னாப்பிரிக்க கருப்பு இன மக்களின் உரிமைகளுக் காகப்போராட தென்னாப்பிரிக்கப் பழங்குடியினரின் தேசிய காங்கிரஸ் 1912ஆம் ஆண்டு ஜனவரி 8 அன்று ஆரம்பிக்கப் பட்டது. இக்கட்சியின் முதலாவது தலைவர் சோல் பிளாட்ஜி. இக்கட்சியின் பெயர் 1923ஆம் ஆண்டில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் என்று மாற்றப்பட்டது. இது தற்போது தென்னாப்பிரிக்கா வின் ஆளும் கட்சியாக உள்ளது.
- **உலக சிரிப்பு தினம்**: (World Laughter Day): முதன்முதலாக 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் நாள் மதன் கட்டாரியா என்பவரால் சிரிப்பு தினம் தொடங்கப்பட்டது. அவர் இதை உலக அமைதிக்காக சிரிப்பு யோகாவாகவே அறிமுகப் படுத்தினார். இன்று 65 நாடுகளில் 6000 சிரிப்பு கிளப்புகள் நடந்து

வருகின்றன. உடம்பிற்கும், மனதிற்கும் சிரிப்பு நல்லது. இதை வலியுறுத்தியே இத்தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

➲பெஞ்சமின் பிராங்க்ளின் பிறந்த தினம் (Benjamin Franklin Birth Anniversary Day): பெஞ்சமின் பிராங்க்ளின் 1706ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாள் அமெரிக்காவில் பிறந்தார். மின்னலில் கூட மின்சாரம் இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்தார். மின்சாரம், இடி, மின்னல் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து இடி தாங்கியையும், வெள்ளெழுத்துக் கண்ணாடி யையும் (Bifocal Glasses) கண்டுபிடித்தார். அமெரிக்காச் சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திட்ட மூவரில் ஒருவர் பெஞ்சமின் ஆவார்.

➲**ஜேம்ஸ் வாட் பிறந்த தினம்**(James Watt Birth Anniversary Day): ஜேம்ஸ் வாட் 1736ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் நாள் ஸ்காட்லாந்து நாட்டில் ஐந்தாம் கிளைடில் உள்ள கிரீனாக் என்னும் துறைமுகப் பகுதியில் பிறந்தார். கல்வியை தாயாரிடம் வீட்டிலேயே கற்றார். முதன்முதலாக நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்தார். நீராவி இயந்திரத்தில் இவர் செய்த மேம்பாடுகளே பிரிட்டிஷ் மற்றும் உலகின் பிற நாடுகளிலும் தொழில் புரட்சி ஏற்பட அடிப்படையாக அமைந்தன.

➲**லெனின் நினைவு தினம்**(Lenin Death Anniversary Day): லெனினை உலகப் புரட்சியாளர் என்று அழைக்கிறார்கள். ரஷ்யப் புரட்சிக்கு தலைமை ஏற்று நடத்தியவர். ரஷ்யாவில் பொதுவுடமை அரசை நிறுவினார். சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிபராக பதவி வகித்தார். இவர் சோவியத் மார்க்சியம் – லெனினியம் என்று விரிவு படுத்தப்பட்ட லெனினியம் என்ற கோட்பாட்டினை உருவாக்கினார். சமூகப் புரட்சியாளர் லெனின் 1924ஆம் ஆண்டு ஜனவரி 21 இல் இயற்கை எய்தினார்.

➲**சர்வதேச சுங்க தினம்** (International Customs Day): சர்வதேச சுங்க அமைப்பு அமைக்கப்பட்டு அதன் முதல் நிர்வாகக் கூட்டம் ஜனவரி 26, 1953ஆம் ஆண்டில் புருசெல்ஸில் நடைபெற்றது. 17 ஐரோப்பிய நாடுகள் கலந்துகொண்டன. அதன் பின்னர் 161 சுங்க அதிகாரிகள் உள்பட சுங்கத் துறையினர் இந்த அமைப்பில் இணைந்தனர். இந்த அமைப்பு உலகின் 98 சதவீத பொருளாதார வளர்ச்சிக்குப்பாடுபட்டு வருகிறது. சர்வதேச சுங்க தினம் ஜனவரி 26 அன்று கொண்டாடப்படுகிறது.

➲**சர்வதேச இன அழிப்பு நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறும் நாள்** (International Day of Commemeration in Memory of the Victims of the Holocaust): இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஐரோப்பாவில் வாழ்ந்த யூத மக்களுக்கு எதிராக ஹோலோகாஸ்ட் எனப்படும் யூத இனஒழிப்பு மற்றும் படுகொலையை நாஜிக்கள் செய்தனர். சுமார் 60 லட்சம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சோவியத் படைகள் 1945ஆம் ஆண்டு ஜனவரி 27 அன்று நாஜி மரண

முகாமில் இருந்த யூதர்களை விடுவித்தது. இனப்படுகொலை மீண்டும் நடக்காமல் இருக்க ஐ.நா. அமைப்பு இத்தினத்தை கடைப்பிடிக்கிறது.

➲ **உலகத் தொழுநோய் ஒழிப்பு தினம்** (World Lebrosy Eraication Day):தொழுநோய் குணப்படுத்தக் கூடிய நோய். தொழு நோயாளிகள் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். அவர்கள் மீது அக்கறையும், கருணையும் ஏற்படவும், அவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தவும் ஜனவரி கடைசி ஞாயிற்றுக்கிழமை இத்தினம்கடைப்பிடிக்கப்படுகிறது. தொழு நோயாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் ஐ.நா. பொதுச்சபை 2006ஆம் ஆண்டு டிசம்பர் 13இல் ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது.

## திருக்குறளின் பெருமை

“தினையளவு போதாச் சிறுபுல் நீர்கண்ட
பனையளவு காட்டும் படித்தால்”

**- கபிலர்**

“வள்ளுவரும் தம்குறள் பாவடியால்
வையத்தார் உள்ளுவதெல்லாம்
அளந்தார் ஓர்ந்து”

**- பரணர்**

“உள்ளுவதோ றுள்ளுதோ றுள்ளும்
உருக்குமே வள்ளுவர் வாய்மொழி
மாண்பு”

**- மளங்குடி மருதனார்**

“பொய்ப்பால பொய்யேயாய்ப்
போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினலே –
முப்பாலின் தெய்வத் திருவள்ளுவர்
செய் திருக்குறளால்
வையத்து வாழ்வார் மனத்து”

**- தேனிக்குடி கீரனார்**

“புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன் -
வித்தகன் தெய்வப்புலவர் திருவள்ளுவர்
சொன்ன பொய்யில் மொழி
இருக்கும்போது”

**- கவிமணி**

“செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை
நெஞ்சமே சிந்தனை செய்வாய் தினம்”
“நீதித் திருக்குறளை நெஞ்சாரத் தம்
வாழ்வில் ஓதித் தொழுது எழுக ஓர்ந்து”

**- கவிமணி**

**நா.சரண்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சின்னச் சின்ன செய்திகள்

1.இந்தியாவின் முதல் செய்தித் தாள்?
பெங்கால் கெஜட்

2.பவுண்டன்பேனாவைக்கண்டுபிடித்தவர் யார்?
லூயிஸ் இ.வாட்டர்மேன்

3.கழுகினைத் தேசிய சின்னமாகக் கொண்ட நாடு எது?
ஸ்பெயின்

4.மனித மூளையின் பகுதிகள் எத்தனை?
மூன்று பகுதிகள்

5.எந்த நாட்டில் தொடர்ந்து 88 நாட்கள் பகலாகவே இருக்கும்?

நார்வே

6.ரஷியாவின் நாணயம் எந்த பெயரில் அழைக்கப்படுகிது. ரூபிள்

7.மனிதனின் அழகு பற்றி ஆய்வு செய்து படிக்கும் படிப்பின் பெயர் என்ன?

காலோலஜி

8.நமது கைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை தசைகள் உள்ளன?

நூறு

**இரா.சந்தியா**

இளங்கலைத் தமிழ் முதாலாமாண்டு.

## நாடுகளும் தேசியப்பூக்களும்

இந்தியா – தாமரைப்பூ

இங்கிலாந்து – ரோஜா பூ

பாகிஸ்தான் - மல்லிகைப் பூ

சீனா – திராட்சைப் பூ

ஜெர்மனி – சோளப்பூ

எகிப்து – தாமரைப்பூ

ஜப்பான் - செர்ரிபூ

ஸ்பெயின் - மாதுளம் பூ

**சி.ஜீவானந்தம்**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## ஆட்டுப்பால் நன்மைகள்

» ஆட்டுப்பால் எளிதில் ஜீரணமாகும்

» இரும்புச்சத்து கிடைக்கிறது

» தொடர்ந்து ஆட்டுப்பால் அருந்திவர ஜீரண சக்தி அதிகரிக்கிறது

» குழந்தைகள் நன்றாகத் தூங்கவும், ஆரோக்கியமாக வாழவும் ஆட்டுப்பால் அருமருந்தாக பயன்படுகிறது

» பச்சிளம் குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கும் வயிற்று வலி, வாந்திபேதி, மலச்சிக்கல் போன்ற உபாதைகள் ஆட்டுப்பால் அருந்துவதால் பெருமளவில் கட்டுப்படுத்தலாம்

» மாட்டுப்பால் அருந்துவதை விட ஆட்டுப்பால் அருந்துவதால் குறைந்த அளவே சளி உருவாகிறது.

» குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்கு சிறந்த மாற்றுப் பாலாக ஆட்டுப்பால் விளங்குகிறது.

**பு.ராகவி**

தமிழ் இலக்கியம் இரண்டாமாண்டு

## புத்தரின் போதனைகள்

- எவருடைய சிந்தை குழப்பம் அடையாமல் இருக்கிறதோ
- அவர்களுக்கு அச்சம் என்பது துளியும் இல்லை
- தூய்மையான எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும், செயல் புரிந்தாலும் மகிழ்ச்சி அவனைப் பின் தொடர்ந்து செல்லும்
- தன்னைத் தானே அடக்கி வெற்றி கொள்பவனே சிறந்த வெற்றியாளன்.

- நல்ல குணமும், புகழும் எங்கு உள்ளதோ அங்கே அவனைப் போற்றப்படும்.
- அச்சமும் வெறுப்பும் இல்லாதவனே அறிஞன்
- கோபத்தை நயத்தால் வெல்ல வேண்டும், தீமையை நன்மையால் வெல்ல வேண்டும்.

**கி.பிரசாந்த்**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## விடுகதைகள்

◉ ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக்கை அது என்ன?

**குடை**

◉ நாக்கு இல்லாதவன் நல்லது செய்வான் அவன் யார்?

**புத்தகம்**

◉ போன ரயில் திரும்ப வராது அது என்ன?

**உயிர்**

◉ உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?

**எறும்பு**

◉ அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும் அது என்ன?

**சாம்பிராணி**

◉ அச்ச இல்லாத சக்கரம் அழகு இல்லாத சக்கரம் அது என்ன?

**வளையல்**

◉ கடலிலே கலந்து கரையிலே பிரிந்து தெருவிலே திரியும் அது என்ன?

**உப்பு**

**ச.தமிழ்ச்செல்வி**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## புதிர்கள்

**1.**வளைக்கரங்களின் கலைத்திறன் காண வானவில்லே வாசலுக்கு வந்ததாம் அது என்ன?

**வண்ணக்கோலம்**

2.இடுப்பை நெளித்து எழுந்து வந்தாள் வஞ்சி கழுத்தை சுற்றி கட்டிக் கொண்டாள் கொஞ்சி அது என்ன?

**இஞ்சிக்கொத்து**

**3.**தங்க உடை போட்டு வந்த தங்கமணி தவிடு நீங்கி சிரித்து வந்த வெள்ளிமணி அது என்ன?

**பச்சரிசி**

**4.**ஆலையில் நீராடி அடுப்பில் குளிர்காய்ந்து அங்காடிக்கு வந்த அச்சுக் குட்டி அது என்ன?

**வெல்லக்கட்டி**

**5.**உச்சிக் குடுமியுடன் உருண்டு வந்த முக்கண்ணன் சாமிக்கு முன்னால் சரிபாதியாய் உடைந்தான் அவன் யார்?

**தேங்காய்**

**சு.சுரேகா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## மருத்துவ குறிப்பு

1.ஓமத்துடன் சிறிது சீரகம் சேர்த்து க'ாயம் செய்து சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும்.

2.புதினா இலையோடு சீரகம் கலந்து தண்ணீர் விட்டு ஒரு சட்டியில் காய்ச்சி காயம் செய்து குடித்து வந்தால் நா வறட்சி அடங்கும்.

3.சீரகமும், திப்பிலியும் சேர்த்து பொடித்து தேனில் குழைத்து அடிக்கடி சாப்பிட்டால் தொடர் விக்கல் விலகும்.

4.மோருடன் சீருகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்து பருகினால் வயிற்றுவலி நீங்கும்.

5.சிறிதளவு சுக்கு, மிளகு, சீரகம் மற்றும் பூண்டு இவைகளை சேர்த்து க'ாயம் செய்து தினமும் குடித்து வந்தால் மந்தம் குணமாகும்.

6.சீரகத்தை வறுத்துப் பொடியாக்கி அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து 2 வேளை சாப்பிட்டு வந்தால் ஜலதோ'ம் மற்றும் இருமல் குணமாகும்.

7திப்பிலி, கடுகு, சீரகம், சுக்கு, மிளகு, வேப்பங்கொழுந்து சேர்த்து அரைத்து நிழலில் காயவைத்து மாத்திரையாக்கி சாப்பிட ஜலதோ'ம் குணமாகும்.

**எம்.கீர்த்தனா.**

இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல் ஈ-பிரிவு

## பொன்மொழி

கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது ஆனால் எழும் கையை தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல். இந்த கடினமான சொல்லைத்தான் நீ பழகிக் கொள்ள வேண்டும்.

**-சுவாமி விவேகானந்தர்**

தொகுப்பு: **எம் ஜனனி**,

முதலாண்டு உயிர் வேதியியல் துறை

## விடுகதை

1.சிரகில்லாமல் பறப்பான் ஆனால் உலகமெல்லாம் செல்வான் அவன் யார்? தபால்

2.நம்முடனே இருப்பான் ஆனால் நீரில் நனையமாட்டான் அவன் யார்?

நிழல்

3. உடல் இல்லை ஆனால் உருவம் உண்டு அது என்ன?

புகை

4. பறக்கும் ஆனால் பறக்காது அது என்ன?

தேசியக்கொடி

5.கொட்டும் ஆனால் விசமாகாது அடிக்கும் ஆனால் வலிக்காது அது என்ன? நீர்வீழ்ச்சி

**வி.நந்தக்குமார்**

வணிகவியல்துறை முதலாமாண்டு

## சித்தமருத்துவம்

- **தூதுவளை**

சளித்தொல்லை, கோழை அகற்றும், மார்புச்சளி நீக்கும், உடல் பலம் பெறும்.

- **கீழாநெல்லி**

மஞ்சள் காமாலை நோயைத் தீர்க்கும்.

- **வேம்பு**

கிருமிநாசினி குளிர்ச்சி தரும், வயிற்றுப்பூச்சிகளை நீக்கும்.

- **நெல்லி**

வாய்ப்புண்ணைக் குணப்படுத்தும்

- **கற்பூரவல்லி**

வியர்வை பெருக்கும், கோழை அகற்றும் ,காய்ச்சல் தீர்க்கும்.

- **வசம்பு**

வயிறு தொடர்பான நோய்களை தீர்க்கும்.

- **பிரண்டை**

பசியைத்தூண்டும், செரிமானமின்மையை நீக்கும்.

**மகேந்திரபூபதி**

பி.சி.எ முதலாமாண்டு

---

## அனுபவ அறிவு

என்ன நடந்தாலும்
எதை இழந்தாலும்
சோந்து போகமாட்டேன்
காரணம்
நான் 100 வெற்றிகளைப் பார்த்தவன்
அல்ல
1000 தோல்விகளைப் பார்த்தவன்....

முடியும் என்றால்
முயற்சி செய்
முடியாது என்றால்
பயிற்சி செய்

வெற்றியைத் தேடி
நீ செல்லாதே
உன் மீது முழு நம்பிக்கை வை ...
வெற்றி உன்னைத் தேடி வரும்

நினைப்பது எல்லாம்
நடந்து விடாது
ஆனால் நினைக்காமல்
எதுவுமே நடந்து விடாது
இதுவே வாழ்க்கை

**பி.ஸ்ரிஸ்குமார்**

## பழமொழிகள்

1. எங்கு அன்பு இருக்கிறதோ அங்கே வாழ்வு இருக்கிறது
2. அரைகுறை அறிவு அரைக்கிணறு தாண்டுவது போன்ற ஆபத்து
3. மற்றவர்களை அறிந்தவன் படித்தவன் அவனைப் பற்றியே அறிந்தவன் அறிவாளி
4. தனக்கு அறிவின்மை இருப்பதை உணர்வதே அறிவு தேடுவதற்கு வழி
5. ஒரு மனிதன் அழகு அவன் நாவின் இளமையில் இருக்கிறது.

6. ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கும் அதிர்‘டத்திற்கு அவன்தான் சிற்பி

7. பார்க்காமல் எதையும் பருகாதே, படிக்காமல் எதிலும் கையெழுத்துப் போடாதே

8. உழுதவன் கணக்கு பார்த்தால் உழவுக்கோலும் மிஞ்சாது

9. அறிவின் எதிரில் அறியாமை தலை வணங்குகிறது.

10. வாழ்க்கையில் வெற்றி பெற தேவை, சுறுசுறுப்பும் ஊக்கமும் தான்.


**எஸ்.திவ்யா,**
இரண்டாமாண்டு கணினி அறிவியல், ஈ பிரிவு

## ஓவியம்




சு.ரமணி
III-B.A. ஆங்கிலம்


- ஜெ. புவனேஸ்வரி
முதலாம் ஆண்டு -
வணிகவியல் துறை.


G. Thenmozhi
I - BSC - TFD


Art By,
P. Vigneshwaran,
With Frame.


R. Revathi
II . BSc(CS)'A'